**நில அளவைச் சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நில அளவைச் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நில அளவைச் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தன என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் முக்கிய வருமான மூலமான அனுமதிப்பத்திர வருமானத்தில் ஆண்டுக்குரிய சரியான வருமானத்தை கண்டறிந்து கணக்கீடு செய்வதற்கான முறையைப் பின்பற்றாமல், சபையின் வங்கிக் | நில அளவைச் சபைக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்களை இனங்கண்டு சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே அவற்றைக் கணக்கீடு செய்வதற்கு எந்த | அனுமதிப்பத்திர வருமானத்தில் ஆண்டுக்கு பொருந்தக்கூடிய சரியான வருமானத்தை கண்டறிந்து |

| | | |
|---|---|---|
| கணக்கில் அனுமதிப்பத்திரம் பெற்ற அளவையாளர்களால் வைப்புச் செய்யப்பட்ட பணத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் இந்த ஆண்டு வருமானமாக ரூபா 5,111,652 தொகையை சபை குறிப்பிட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படாத வருமானமாக காட்டப்பட்டுள்ள இந்த ரூபா 5,111,652 பெறுவனவுகள் தொடர்பான தனிப்பட்ட கணக்குகள் இனங்காணப்பட்டு வருமானம் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை. | முறையும் காணப்படவில்லை. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,111,652 தொகை இனங்காணப்படாத வருமானமாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், தனிநபர் கணக்குகளின் கீழ் அனுமதிப்பத்திர வருமானத்தை கணக்கீடு செய்வதற்கும், 2022 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய வருமானத்தை சரியாக இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த பிரச்சினை எதிர்காலத்தில் ஏற்படாது. | கணக்கீடு செய்வதற்கு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தி | கணக்காய்வு செய்யப்பட்ட இறுதிக் கணக்குகள் மற்றும் கணக்காய்வு அறிக்கை உள்ளடங்கலாக ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மும்மொழிகளிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான சபையின் ஆண்டறிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் தொடர்பான கணக்காய்வு கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் விரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் | தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் உத்தியோகத்தர் ஒருவரோ அல்லது | சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் 23(1)(அ) பிரிவு | | பரிந்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரோ நியமிக்கப்பட்டிருக்கவில்லை. தகவலுக்கான கோரிக்கை பெறப்படும் போது அது சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்படும். | ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2002 ஒக்தோபர் 04 ஆம் திகதிய 2002 இன் 17 ஆம் இலக்க அளவை சட்டம் | | | |
| (i) | 37 (எ) | நில அளவீட்டில் ஈடுபடும் நபர்களின் கல்வி, பயிற்சி மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றில் சீரான தன்மை மற்றும் பரஸ்பரத்தைப் பாதுகாப்பதற்காக வெளிநாடுகளில் உள்ள உரிய அதிகாரிகளுடன் பரஸ்பர ஏற்பாடுகளை பேச்சுவார்த்தை நடாத்தி நிர்வகித்தல் பணி சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நில அளவீட்டில் ஈடுபடும் நபர்களின் கல்வி, பயிற்சி மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றில் சீரான தன்மை மற்றும் பரஸ்பரத்தை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப ஏற்பாடாக, நில அளவைத் திணைக்களம் மற்றும் தியத்தலாவ நில அளவை மற்றும் வரைபட நிறுவனம் என்பன நில அளவை சபையில் ஒரு சுயாதீனமான அமைப்பாக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் இனங்காணப்பட்டுள்ளது. | இச் சட்டத்தின் பிரகாரம் நில அளவீட்டில் ஈடுபடும் நபர்களின் கல்வி, பயிற்சி மற்றும் அங்கீகாரம் தொடர்பான விடயங்களிற்குரிய பரஸ்பர ஏற்பாடுகளுக்கு வெளிநாடுகளுடனான இணக்கம் அடைந்துகொள்ளப் பட வேண்டும். |
| (ii) | 38 (இ) | சபையின் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | நில அளவை சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட 04 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திட்டம் 2021 ஒக்தோபர் 08 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அங்கீகாரம் கிடைத்ததும் உரிய ஆட்சேர்ப்பை மேற்கொள்ள முடியும். | சபையின் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 38 (எ) | சபையின் விவகாரங்களை நிர்வகிப்பது தொடர்பாக விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | 2002 இன் 17 ஆம் இலக்க அளவைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் விவகாரங்களை நிர்வகிப்பது தொடர்பான விதிகள் உருவாக்கப்பட்டிருக்காததுடன் நிர்வாக விவகாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | சபையின் விவகாரங்களை நிர்வகிப்பது தொடர்பான விதிகள் உருவாக்கப்பட வேண்டும். |
| (iv) | 46 | 2020 ஆம் ஆண்டில் நில அளவையாளரின் தொழில் முறைகேடுகள் தொடர்பாக பெறப்பட்ட 113 முறைப்பாடுகளில் 80 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 143 முறைப்பாடுகளில் 104 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பாதகமான சுகாதார காரணங்களுக்காக நாடு முடக்கப்பட்டமை, சபைக் கூட்டங்கள் மற்றும் உபகுழுக் கூட்டங்களை நடாத்துதல் கட்டுப்படுத்தப்பட்டமை, திட்டமிட்ட விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியமை மற்றும் அழைப்புக்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பங்குபற்றத் தவறியமை ஆகியவற்றின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகளில் 80 முறைப்பாடுகளையும் 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் 104 முறைப்பாடுகளையும் தீர்க்க முடியவில்லை. | நில அளவையாளரின் தொழில் முறைகேடு தொடர்பான விசாரணையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | 32(1) | 2002 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை நிரந்தர செயலாளர் ஒருவரை சபை நியமித்திருக்கவில்லை. | பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் செயலாளர் ஒருவரை நியமிக்க முடியவில்லை. நிரந்தர செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை கோருவதற்கான செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுவதற்கு | சபைக்கு நிரந்தர செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. |

### 1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆஈம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 9(I) பிரிவில் உள்ள மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு மாத்திரமே வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. நில அளவைச் சபை அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமாக இல்லாத போதிலும் வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தால், அங்கீகாரம் பெறப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | நில அளவை சபையானது வரி செலுத்துவதில் இருந்து விலக்கு கோரி 2022 மார்ச் 22 இல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்த போதிலும் அந்தக் கடிதத்திற்கு இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் வரி விலக்கு பெறுவதற்கு அல்லது வரி செலுத்துவதற்கு காரணங்கள் இருந்தால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 958,915 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,868,355 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,909,440 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் மற்றும் செயலமர்வுகளின் தேறிய வருமானம் என்பன ரூபா 2,123,610 ஆல் குறைவடைந்தமையே இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

செயலமர்வுகள் நடாத்தப்படாததால், செயலமர்வு வருமானம் பெறப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் 64 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் சபையின் நடைமுறை விகிதம் முறையே 1 : 0.38 மற்றும் 1 : 0.40 ஆக காணப்பட்டதுடன் விரைவுச் சொத்து விகிதம் முறையே 1 : 0.39 மற்றும் 1 : 0.40 ஆக காணப்பட்டது.